(6) அறிவிப்பு

அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1970–71-ம் ஆண்டுக்குரிய அவையுரிமைக் குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்.

1. திரு. எ. பாலசுப்பிரமணியன்.
2. திரு. செ. கந்தசாமி கவுண்டர்.
3. திரு. எஸ். முத்துலிங்கம்.
4. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
5. திரு. எஸ். இராமச்சந்திரன்.
6. திரு. சு. ம. துரைராஜ்.
7. திரு. சி. வீரமணி.
8. திரு. கொளத்தூர் கோதண்டம்.
9. திரு. மா. பா. சாரதி.
10. திரு. பெ. மலைச்சாமி.
11. திரு. வ. ஆர். மாரிமுத்து.
12. திரு. ரா. கனகசபை.
13. திரு. எஸ். ராமலிங்கம்.
14. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970–71-ம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்கட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

சட்டப் பேரவையின் 183(4)-வது விதிக்கிணங்க மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(7) அரசினர் மசோதா.

தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 9/1970).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I move—'That the Tamil Nadu Appropriation (No. 2) Bill,* 1970 (L.A. Bill No. 9 of 1970) be taken into consideration'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

*Published in the FORT ST. GEORGE GAZETTE Extraordinary, dated 28th March 1970.

பிரிவு 2, அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 1970–71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்.

(8) தகவல் கோரல்.

சென்னையில் பத்திரிகை நடத்தும் வடநாட்டு முதலாளியின் வீட்டில் மத்திய காவல்துறை நடத்திய சோதனை.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I want a change in the order of business. I want to get some information from the Hon. Chief Minister.

சென்னையில் பத்திரிகைகள் நடத்திக்கொண்டிருக்கும் ஒரு பெரிய வட நாட்டு முதலாளியின் வீட்டில் இந்த மாதம் 25-ம் தேதி சென்ட்ரல் போலீஸ் ரெயிட் செய்து சில ரிக்கார்ட்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. கல்கத்தாவில் உள்ள ஒரு கம்பனி சம்பந்தமான தவறுகள் சம்பந்தமாக நடைபெற்ற புலன் விசாரணையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது உண்மையா? அது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி அது சர்க்காருக்குத் தெரிந்திருந்தால் அதைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிடாமல் இருப்பதன் மர்மம் என்ன? அமைச்சரவைக்கும் இந்த முதலாளிக்கும் ஏதாவது தொடர்பு உண்டா.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனி உறுப்பினர் கேள்வியா?

THIRU P. G. KARUTHIRUMAN : As the Leader of the Opposition, I want to get some information by way of private notice question.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பேரவைத் தலைவரிடம் அனுமதி பெற்றுத்தானே கொண்டுவரவேண்டும்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஒரு பெரிய 'ரெயிட்' நடந்திருக்கிறது. 'சென்ட்ரல் ப்யூரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்' நடத்தியிருக்கிறார்கள். அது தெரியாது இந்த அமைச்சரவை தூங்கிக்கொண்டிருக்கிறதா? அதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை தந்திருக்க வேண்டும். இவர்களுக்கு தெரியாமலா நடந்திருக்கிறது. ஏன் அதைப்பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது இங்கு ஒரு பிரச்னையைக் கேள்விகளைப்போல் எழுப்பிச் சர்க்கார் தூங்கிக்கொண்டிருக்கிறதா, சர்க்காருக்குத் தெரியாதா என்றெல்லாம் கேட்டார்கள். அவர்கள் சொன்னார்கள், ஒரு வடநாட்டு முதலாளியின் இல்லத்தில் சோதனை நடைபெற்றது என்றும், ரெயிட் நடைபெற்று ரிக்கார்ட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அது சர்க்காருக்குத் தெரியாதா என்றும் கேட்டார்கள். அந்தத் தகவல் உண்மை. ஆனாலும்